## அவள் பிடிபட்டாள்

### எண்சீர் விருத்தம்

திம்மன்மேல் சென்றவிழி திரும்பு தற்குள்
    சேயிழையாள் பிடிபட்டாள் பகைவ ராலே!
அம்மங்கை மறுமுறையும் பார்த்தாள் அங்கே
    அன்புள்ள அகமுடையான் கிடந்த கோலம்!
மெய்ம்மைநெறி எய்தினீர், தேசிங் கென்னும்
    வீணனையும் நாம்தொலைத்தோம் அன்றோ என்றாள்.
மும்முறையும் பார்த்திட்டாள் 'அத்தான் வந்தேன்'
    முடிவடைந்த தென்பணியும் என்று சொன்னாள்.

## தேசிங்குக்குச் சேதி எட்டிற்று

### தென்பாங்கு—கண்ணிகள்

செஞ்சிப் பெருங் கோயில்—தன்னிலே
தேசிங்கு வீற் றிருந்தான்
அஞ்சி அருகினிலே—இருந்தார்
அமைச்சர், மற் றவர்கள்
பஞ்சு பெருந் தீயைப் பொசுக்கப்
பார்த்தும் இருப்பீரோ
செஞ்சிப் படி மிதித்தார்—இங்குள்ள
சிப்பாய் தனை மடித்தார்

சென்று பிடித் தாரோ—அல்லது
செத்து மடிந் தாரோ
ஒன்றும் தெரிய வில்லை—நடந்த
தொன்றும் தெரிய வில்லை
என்று துடி துடித்தான்—தேசிங்கன்!
இருவர் சிப் பாய்கள்,
நின்று தலை வணங்கி—அவ்விடம்
நிகழ்ந்தவை உரைப்பார்;

திம்மனும் சுப் பம்மா—எனுமோர்
சேயிழையும் எதிர்த் தார்
நம்மவர் சிற்சில பேர்—இறந்தார்
நம்அதி காரியின் மேல்
திம்மன் அவன் பாய்ந்தான்—ஒரு சொல்
செப்பினன் அப்போது
'செம்மையில் என்னிடமே—சிக்கினாய்
தேசிங்கு மாய்க' என்றான்

என்றுசிப் பாய் உரைத்தான்—தேசிங்கன்
'என்னை மடிப்பது தான்
அன்னவ ளின் நினைப்போ—சரிதான்
அப்படியா அடடே
இன்று பிழைத்தேன் நான்—அடடே
என்று பு கன்றவனாய்ப்;
'பின்னும் நடந்ததென்ன?—இதனைப்
பேசுக' என்று ரைத்தான்.

திம்மன் மடிந்து விட்டான்—மனைவி
சேயிழை சிக்கி விட்டாள்
செம்மையில் அன்னவளின்—இரண்டு
செங்கையைப் பின் இறுக்கி
நம்மவர் இவ்வி டத்தை—நோக்கியே
நடத்தி வருகின் றார்
திம்மன் மனைவியைப்போல்—கண்டிலோம்
திறத்தில் என்று ரைத்தார்.

## சுப்பம்மாவை இழுத்து வந்தார்கள்

### தென்பாங்கு—கண்ணிகள்

கோட்டை நெடும் வாயிலினைக் குறுக்கிவிட்டார்—அந்தக்
கோதையை நடத்திவரும் கூட்ட மக்களும்!
போட்டிறுக்கிப் பின்புறத்தில் கட்டிய கையும்—முகில்
போற்பரவி மேற்புரளும் நீண்ட குழலும்
நீட்டி வைத்த வேலின்முனை போன்றவிழியும்—வந்து
சீறுகின்ற பாம்பையொத்த உள்ளமும் கொண்டாள்
"கோட்டையினில் யாரிடத்தில் கொண்டுசெல் கின்றீர்
—என்னைக்
கூறிடுவீர்" என்றவுடன் கூறுகின்றனர்:

"ஆளுபவர் தேசிங் கெனக் கேட்ட தில்லையோ?—அவர்
அவ்விடத்தில் வீற்றிருத்தல் கண்ட தில்லையோ?
தோளுரத்தை இவ்வுலகம் சொன்ன தில்லையோ?—என்று
சொன்னமொழி கேட்டனள் வியப்படைந்தனள்
ஆளுகின்ற தேசிங்கென நாங்கள் நினைத்தோம்—அவன்
அங்கு வந்த பேர்வழியை ஒத்தி ருந்ததால்!
வாளுக்கிரை ஆனவனை நாங்கள் அறியோம்—அந்த
மன்னன் நினைவாய் அவனை வெட்டி மடித்தோம்.

செஞ்சியினி லேஇருக்கும் செந்தமிழர்கள் பெற்ற
தீமையின்னும் தீரவில்லை என்க ணவரோ
செஞ்சி மன்னன் தீர்ந்தனன் இனித்த மிழர்க்கே—ஒரு
தீங்குமில்லை என்னும்உளப் பாங்கொடு சென்றார்
செஞ்சியினை ஆளுகின்ற அவ் வடக்கரை—என்
செவ்விழிகள் காணும் என்கை காண வசமோ?
மிஞ்சும் என்றன் ஆவல்நிறை வேறுவ துண்டோ—என
மெல்லி அவள் நெஞ்சில் வெறி கொண்டு நடந்தாள்.

சொல்லினன் இம்மொழிகள்—சுப்பம்மா
சொல்லுகின்றாள் சிரித்தே;
தில்லித் துருக்கரையும்—மற்றுமொரு
திப்புவின் பேரினையும்
சொல்லி இத்தென்னாட்டைப்—பலபல
தொல்லையில் மாட்டி விட்டார்;
மெல்ல நுழைந்து விட்டார்;—தமிழரின்
மேன்மைதனை அழித்தார்.

அன்னவர் கூட்டத்திலே—உனைப்போல்
ஆரும் தமிழ் நாட்டில்
இன்றும் இருக்கவில்லை—பிறகும்
இருக்கப் போவதில்லை
அன்று தொடங்கி இந்தத்—தமிழர்
அன்புறு நாடு பெற்ற
இன்னலெல்லாம் வடக்கர்—இழைத்த
இன்னல்கள் என்றுரைத்தாள்.

ஆளும் நவாபினையோ—தமிழர்
ஆரும் புகழுகின்றார்—
தேளென அஞ்சுகின்றார்—செஞ்சியின்
தேசிங்கின் பேருரைத்தால்?
'நாளும் வரும்; வடக்கர்—தொலையும்
நாளும் வரும்; அதை எம்
கேளும் கிளைஞர்களும்—விரைவில்
கிட்டிட வேண்டும் என்றாள்.

## தேசிங்கு சினம்

### எண்சீர் விருத்தம்

நாள்வரட்டும்; போகட்டும்; ஆனால் இந்த
நலமற்ற தமிழர்மட்டும் வாழ மாட்டார்;
தோளுரமும் மறத்தனமும் அவர்கட் கில்லை;
சொல்லேடி தமிழச்சி! இருந்தால் சொல்லு!
"நாள்வரட்டும்" எந்தநாள்! தமிழர் வெல்லும்
நாள்தானோ! அந்தநாள் வருவ தற்குள்
வாள்வீரர் வடநாட்டார் வளர்ச்சி யின்றி
மலைக்குலையில் தூங்குவரோ ஏண்டி?" என்றான்.

தமிழரெல்லாம் வாழார்கள் நீதான் வாழ்வாய்;
தமிழர்க்கு மறமில்லை நன்று சொன்னாய்
இமயமலைக் கல்சுமந்த வடநாட் டான்பால்
சேரனார் இயல்புதனைக் கேள்விப் பட்ட
உமதுநாட் டானிருந்தால் கேட்டுப் பார்ப்பாய்
உயிர்பதைப்பார் தமிழ்மகனைக் கனவில் கண்டால்!
எமதருமைத் தமிழ்நாட்டின் எச்சி லுண்டாய்
எச்சிலிட்ட கையைநீ இகழ்ச்சி செய்தாய்.

யாமெல்லாம் சாகத்தான் வேண்டும் போலும்
இருந்தாலோ வடநாட்டார் வாழார் போலும்
நீ,மற்றும் உன்நாட்டார், வளர்ச்சி எய்தி
நீளும்நிலை யைத்தானே எதிர்பார்க் கின்றோம்!
தூய்மையில்லை; நீங்களெல்லாம் கலப்ப டங்கள்
துளிகூட ஒழுக்கமிலாப் பாண்டு மக்கள்!
நாய்மனப்பான் மைஉமக்கு! வளர்ச்சி பெற்றால்
நடுநிலைமை அறிவீர்கள்! அடங்கு வீர்கள்!

வஞ்சகத்தைத் தந்திரத்தை, மேற்கொள் ளாத
வாய்மையுறு தமிழ்நாட்டார் தோற்றார், அந்த
வஞ்சகத்தைத் தந்திரத்தை உயிராய்க் கொண்ட
வடநாட்டார் வென்றார்கள்; இதன்பொ ருள்கேள்;
நெஞ்சத்தால், தமிழ்நாட்டார் வென்றார், அந்த
நிலைகெட்டார் தோற்றார்கள் என்று ணர்வாய்.
கொஞ்சமுமே உயர்நோக்கும் தறுகண் வாய்ப்பும்
கொள்ளாத வாழைக்குக் கீழ்க்கன் றேகேள்,

ஆட்சிஎனில் ஐம்பொறியை ஆள்வ தாகும்!
அடுக்காத செயல்செய்தோன் ஆளக் கூடும்:
காட்சியிலே காணுமுகில் ஓவி யந்தான்
கலைந்துவிடும் ஒருநொடிக்குள்; நிலைப்ப தில்லை!
காட்டிலொரு முயற்குட்டி துள்ளக் கூடும்;
கருஞ்சிறுத்தை கண்விழித்தால் தெரியும் சேதி!
தோட்டத்துப் புடலங்காய் தமிழர் நாடு
தூங்கிவிழித்தால் உடையோன் உரிப்பான் தோலை!

'அறம்'எனுமோர் அடிப்படைகொண் டதுதான் வீரம்
அவ்வீரம் தமிழரிடம் அமைந்த தாகும்
பிறவழியால் வெற்றியொன்றே கருத்தாய்க் கொண்ட
பிழைபட்ட ஒழுக்கத்தைத் தமிழர் ஒப்பார்!
முறைதெரியா முட்டாளே திருந்தச் சொன்னேன்
முன்இழைத்த குற்றத்தை இனிச்செய் யாதே.
சிறையோடா? கொலையோடா? எனக்குத் தண்டம்
செப்படா என்றுரைத்துத் தீப்போல் நின்றாள்.

கட்டோடு பிடித்திருந்த சிப்பாய் மாரைக்
கண்ணாலே எச்சரிக்கை செய்து, மன்னன்
'இட்டுவா கொலைஞரைப்போய், இதையும் கேட்பாய்,
எல்லார்க்கும் எதிரினிலே, பொது நிலத்தில்,
பட்டிஇவ ளைக்கட்டி நிற்கச் செய்து
பழிகாரி இவளுள்ளம் துடிக்கு மாறு
வெட்டுவிப்பாய், ஒருகையை; மறுநாட் காலை
வெட்டுவிப்பாய் ஒருமார்பை; மூன்றா நாளில்

